# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS.93/2015 . நாள்.19.06.2024**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சத்தியநாராயணன் | **வயது** | 67 |
| **த/பெ. க/பெ.** | பச்சப்பமுதலி | **மதம்** | |
| **முகவரி** | அப்புகொட்டாய் | **தொழில்** | |

**<u>வா.சா. 1 ஆஜர். முதல் விசாரணை :</u>**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். எனது தரப்பில் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டது ஆகும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. 09.12.1992 தேதிய ஆவண எண்.654/92 கிரய பத்திரத்தின் **சார்பதிவக நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 16.10.2015 தேதிய பட்டா எண்.1222 இணையதள நகல் **வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. 28.05.2013 தேதிய 1ம் பிரதிவாதியால் கொடுக்கப்பட்ட **கடித நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 23.09.2013 தேதிய சட்ட அறிவிப்பு **அலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 24.09.2013 தேதிய 1ம் பிரதிவாதியால் பெறப்பட்ட **அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. 25.09.2013 தேதிய 3ம் பிரதிவாதியால் பெறப்பட்ட **அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. 24.10.2013 ம் தேதிய 1ம் பிரதிவாதியால் **அனுப்பட்ட பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. 15.04.2015 தேதிய 1ம் பிரதிவாதியால் அனுப்பப்பட்ட **பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஓம்/– எஸ்.வி.சண்முகநாதன், பி.காம்.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.